**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

**OS 96/2019**

**01.12.2025.**

**DW- 1**

**பி.வா.சா.1.சூரஜ்குமார், த/பெ. ராஜசேகரன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள சித்ரா எனது நெருங்கிய உறவினர் என்றால் - சரிதான். சித்ரா என்பவர் எனது தகப்பனார் ராஜசேகரனின் உடன் பிறந்த சகோதரி என்றால் - சரிதான். ராஜசேகரன், சித்ரா இவர்களின் தகப்பனார் பெயர் சுப்ரமணிய பத்தர் என்றால் - சரிதான். வழக்குரை விவரம், எதிர் வழக்குரை விவரம், வாதி, பிரதிவாதி யார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் - சரிதான். 2 ம் பிரதிவாதியான சீனிவாசன் எனக்கு மாமா முறை ஆவார். சீனிவாசனும் ரவிசங்கரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் - சரிதான். பவர் எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் நபரும் அவரிடமிருந்து கிரயம் பெற்ற நானும் நெருங்கிய உறவினர்கள் என்றால் - சரிதான். ரவிசங்கர் என்பவர் வாதியான சித்ராவின் கணவர் என்றால் - சரிதான். வழக்கு சொத்தில் இன்றைய தேதியில் எனது அப்பாவின் அப்பாவான தாத்தா தான் அடகு கடை நடத்தி வருகிறார் என்றால் - தற்காலிகமாக நடத்தி வருகிறார். வழக்கு சொத்து அனுபவம் தாத்தா வசம் உள்ளது என்றால் - சரியல்ல. என்னிடம் உள்ளது. சாட்சி தற்போது அனுபவம் தாத்தா வசம் உள்ளது என்கிறார். வழக்குரையில் கண்டுள்ள சொத்தானது மன்னார்குடி, கம்மாளத்தெருவில் உள்ளது என்றால் - சரிதான். தாவா சொத்து நான் கிரயம் வாங்குவதற்கு முன்பு யாரிடம் உரிமை இருந்தது என்றால் - சித்ரா அத்தையிடம் இருந்தது. சித்ராவிற்கு சொந்தமான சொத்தை எந்த தேதியில் யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் - எனக்கு தெரியாது. நான் கிரயம் பெற்ற சொத்தின் அசல் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். கிரய பத்திரத்திற்குரிய மூலப் பத்திரமான சித்ராவிற்குரிய அசல் பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். சித்ராவின் பவர் ஏஜெண்ட் அசல் கிரய பத்திரத்தை எனக்கு கிரயம் செய்துக்கொடுத்த காலத்தில் சார்பதிவாளர் வசம் முன்னிலைப்படுத்தினார்களா என்றால் - முன்னிலைப்படுத்தினார். என்னுடைய கிரய பத்திரம் பதிவு செய்யப்படும் நேரத்தில் சித்ராவின் அசல் பத்திரம் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தால் சார்பதிவாளர் அந்த ஆவணத்தை பார்வையிட்டதற்காக அதில் ஒரு மேலெழுத்து எழுதுவார் என்றால் - அதுபற்றி தெரியாது. பொது அதிகார ஆவணம் யாரால் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் - சீனிவாசனுக்கு சித்ரா அத்தை எழுதிக்கொடுத்தார்கள். பொது அதிகாரம் எழுதி கொடுக்கும் காலத்திலாவது, சித்ரா அசல் ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலத்தில் முன்னிலைப்படுத்தினாரா என்றால் - தெரியாது. அவ்வாறு முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தால் சித்ராவின் அசல் பத்திரத்தில் சார்பதிவாளர் அசல்

ஆவணத்தை பார்வையிட்டதாக ஒரு குறிப்பு எழுதுவார் என்றால் - அதுபற்றி தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு விவரங்கள் தெரியும். பொது அதிகார ஆவணம் என்பது எந்த தேதியில் யாரால் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் - 28.06.2018 ல் சித்ரா என்பவர் சீனிவாசனுக்கு எழுதிக்கொடுத்தார். சித்ராவும் சீனிவாசனும் நெருங்கிய உறவினர்கள் என்றால் - சரிதான். பொது அதிகார ஆவணத்தின் அசலும் எனது பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் அசலும் என் வசம் தான் உள்ளது என்றாலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் - சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பொது அதிகார ஆவணமும் எனது பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரத்தின் அசலும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சான்றிட்ட நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் - அதுபற்றி தற்போது சாட்சி தெரியாது என்கிறார். மேற்படி 2 ஆவணங்களின் அசல் என் கைவசம் தான் உள்ளது என்றால் - கிரய பத்திரம் என் வசம் உள்ளது. பொது அதிகார ஆவணம் என்னிடம் இல்லை என்றால் - அதுபற்றி தெரியாது. நான் மேஜரானதும் எனது தகப்பனார், சொத்து சம்மந்தப்பட்ட மூல ஆவணங்கள், பொது அதிகார ஆவணம், மூலப்பத்திரம் என்னிடம் தான் உள்ளது என்றால் - என் கிரய பத்திரம் என்னிடம் உள்ளது. மூல ஆவணங்கள் இல்லை. பொது அதிகார பத்திரம் என்னிடம் இருக்கிறதா என்று தெரியவில்லை. பொது அதிகார ஆவணமும் என்னிடம் கிடையாது என்றால் - சரிதான். என் பெயரில் ஏற்பட்ட கிரய சாசனத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனது வழக்கு எனக்கு பாதகமாக முடியும் என்பதால் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரியல்ல. பொது அதிகார ஆவணம் எழுதப்பட்ட காலத்தில் நான் இருந்தேன் என்றால் - இருந்தேன். பொது அதிகாரம் ஆவணம் எழுதும்போது நான் அருகில் இருந்தேன் என்றால் - என் தகப்பனார் சொல்லி தெரியும். அந்த பொது அதிகார ஆவணத்தை நான் படித்து பார்த்து தெரிந்துக்கொண்டேனா என்றால் - தற்போது தெரிந்துக்கொண்டேன். நான் பொது அதிகாரப் பத்திரத்தை எந்தவொரு நகலையும் தாக்கல் செய்யவில்லை என்றால் - ஜெராக்ஸ் நகலாக தாக்கல் செய்துள்ளேன். ஆனால் குறியீடு செய்யப்படவில்லை. குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களை பொறுத்துதான் சாட்சி அளிக்கமுடியும் என்றால் - சரிதான். பொது அதிகார ஆவணத்தை நீதிமன்றததில் தாக்கல் செய்தால் அது எனக்கு எதிராக அமையும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரியல்ல. பொது அதிகார ஆவணத்தில் உள்ள பல்வேறு விசயங்கள் உள்ளது என்றும் அதன் அசலை தாக்கல் செய்தால் அது எங்களுக்கு எதிராக இருக்கும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரியல்ல. எனக்கு பல்வேறு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டும் பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். அசலை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். பொது

அதிகார ஆவணமானது எத்தனை ரூபாய் பத்திரத்தில் எழுதப்படவேண்டும் என்றால் - எனக்கு தெரியாது. முத்திரைத்தாளில் தான் எழுதப்படவேண்டும் என்றால் - சரிதான். அந்த பொது அதிகார ஆவணம் முத்திரைத்தாளில் எழுதப்படாமல் இருக்கிறது என்றால் - நினைவில்லை. பொது அதிகார ஆவணம் உரிய முத்திரை தாளில் எழுதப்படவில்லை என்றால் - அதுபற்றி தெரியாது. இந்த வழக்கில் நான் மைனராக இருந்தபோது என் தகப்பனார் இந்த சொத்தை வாங்கினார் என்று சொல்லியுள்ள நிலையில் எனது தகப்பனாரை ஒரு சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் - விசாரிக்க தயாராக இருக்கிறேன். பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்த சித்ரா மற்றும் சீனிவாசன் ஆகியோர்கள் விசாரிக்க உள்ளேனா என்றால் - உள்ளேன். பொது அதிகார ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக நேரம் முடிந்து மாலை 06.50 க்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. பதிவு செய்யப்பட்ட நேரம் மதியம் ஆகும். மதியம் எத்தனை மணிக்கு என்றால் - என் தகப்பனார் மதியம் பதிவு செய்யப்பட்டதாக கூறினார். நேரம் ஞாபகம் இல்லை. என் தகப்பனாரிடம், பொது அதிகார ஆவணம் முத்திரைத்தாளில் எழுதப்பட்டதா அல்லது அதற்கான தொகை செலுத்தப்பட்டதா என்பதை தெரிந்துக்கொண்டேனா என்றால் - உரிய முத்திரைத்தாளில் எழுதப்பட்டது. பொது அதிகார ஆவணமே உரிய முத்திரைத்தாளில் எழுதாமைக்கும் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக நேரம் முடிந்து பதிவு செய்யப்பட்டதற்கான காரணம் சித்ரா என்பவரை ஏமாற்றுவதற்காக அவ்வாறு பதிவு செய்யப்பட்டது என்றால் - சரியல்ல. சித்ராவின் கணவரின் உடன்பிறந்த சகோதரர் தான் சீனிவாசன் என்றால் - சரிதான். நெருங்கிய உறவு முறையை பயன்படுத்தி, சித்ராவின் கணவரின் சகோதரர் என்ற முறையில் சித்ராவை மோசடியாக பயன்படுத்தி பவர் பத்திரம் எழுதி வாங்கப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுக்கும்போது, பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் சித்ராவிற்கு சீனிவாசன் எவ்வித மறுபயனும் கொடுத்ததாக இல்லை என்றால் - அதுபற்றி தெரியாது. எனக்குதெரியாத என்று சொல்லும் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும் அதனை நீதிமன்றத்தில் சொன்னால் உண்மை தெரிந்துவிடும் என்று தெரியாது என்று சாட்சி அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. பொது அதிகார ஆவணம் சித்ரா அவர்களால், சீனிவாசன் அவர்களுக்கு சொத்துக்களை பராமரிப்பதற்காக கொடுக்கப்பட்டது என்றாலும் ஆனால் சித்ராவை மோசடியாக பயன்படுத்தி மேற்படி விவரங்கள் தெரிவிக்கப்படாமல் நெருங்கிய உறவுமுறையை பயன்படுத்தி சித்ராவின் கையெழுத்தை பவர் பத்திரத்தில் மோசடியாக பெறப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. சார்பதிவாளர் பணியை முடித்துக்கொண்டு செல்ல இருக்கிறார் என்றும் உடனடியாக கையெழுத்து போடும்படி சொன்னதால் சித்ரா பவர் பத்திரத்தை படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டுக்கொடுத்தார் என்றால் - சரியல்ல. பொது அதிகார ஆவணம் என்பது Nonest என்ற அடி முறையில் செல்லாது என்றால் - சரியல்ல. பொது அதிகார ஆவணத்தில், 3 வது பாராவில் சொத்துக்களை பராமரிப்பதற்காகவும் நிர்வாகம் செய்வதற்காக மட்டும் தான் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. விற்பதற்கான அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. சித்ரா, சீனிவாசனுக்கு கொடுத்திருந்த பொது அதிகார ஆவணத்தை பராமரிப்பதற்கும், நிர்வாகம் செய்வதற்காக மட்டும் தான் கொடுத்திருந்தார் என்றாலும் விற்பனை செய்வதற்காகவும் மாற்றம் செய்வதற்காக எந்தவிதமான அதிகாரமும் சித்ரா கொடுக்கவில்லை என்றால் - சரியல்ல. சித்ராவை சீனிவாசன் மோசடியாக நம்ப வைத்து அவசரமாக சித்ராவிடம் கையெழுத்து வாங்கியுள்ளார் என்றால் - சரியல்ல. பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்கும் காலத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாகவோ நான் அருகில் இல்லை என்று சொன்ன காரணத்தினால் அது மோசடியான ஆவணம் தான் என்றால் - சரியல்ல. அவசரகதியில் எழுதப்பட்ட காரணத்தினால் தான் உரிய முத்திரைத்தாளில் எழுதப்படவில்லை என்றாலும் சார்பதிவாளர் அலுவலக பணி நேரம் முடிந்தபின்னர் அவசர அவசரமாக சித்ரா அவர்களுக்கு படித்து காண்பிக்கப்படாமல் சீனிவாசன் அவர்கள் பதிவு செய்யப்பட்டது என்றால் - சரியல்ல. பவர் பத்திரத்திற்கு சொத்து விவரங்கள் யார் சொன்னது என்றால் - அதுபற்றி தெரியாது. பவர் பத்திரத்திற்கு சொத்து விவரம் எங்கிருந்து எடுத்தார்கள் என்றால் - மூலப்பத்திரத்தை வைத்து சொல்லியுள்ளார்கள். மூலத்திரத்தை பொது அதிகாரம் ஆவணம் எழுதி வாங்கிய அசல் ஆவணத்தை என் தகப்பனாரிடமோ அல்லது அதிகாரம் பெற்ற முகவரிடமோ கொடுக்கவேண்டும் என்றால் - சரிதான். அசல் ஆவணத்தை பத்திர அலுவலகத்தில் காட்டிவிட்டு திரும்ப தருவதாக சொல்லி உடனடியாக சித்ரா வழக்கு தாக்கல் செய்துவிட்டார். அவ்வாறு திரும்ப தருவதாக சித்ரா சொல்லியிருந்தால் அசல் அவணத்தை சார்பதிவாளர் வசம் காட்டியிருப்பார் என்றும் அதனை சார்பதிவாளர் பார்வையிட்டதாக குறித்திருப்பார் என்றும் சொன்னால் - அதுபற்றி தெரியாது. சொத்து எனது பெயருக்கு எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் வாங்கப்பட்டது என்றால் - ரூ.5,92,200/-க்கு கிரயம் வாங்கப்பட்டது. ரூ.5,92,200/- என்பது எனது கணக்கிலிருந்து யார் கணக்கிற்கு போடப்பட்டது என்றால் - சீனிவாசன் ரொக்கமாக பதிவு செய்யப்படும் அன்று காலை வாங்கிச்சென்றார். சித்ரா பணத்தை வாங்கிக்கொண்டதாக எனது அப்பாவிடம் சொன்னார். ரூ.5,92,200/- பணம் என் அப்பா என்னுடைய படிப்பிற்காக வைத்திருந்த பணமும் அம்மாவின் நகைகளை அடமானம் வைத்திருந்த பணத்தையும் சேர்த்து கொடுத்தார். எனது படிப்பிற்காக வைத்திருந்த பணத்தை எந்த தேதியில் வங்கியிலிருந்து எடுத்தார் என்றால் - கையில் ரொக்கமாக வைத்திருந்தார். 1 மாதத்திற்கு முன்பு வங்கியிலிருந்து எடுத்து வைத்திருந்தார். எந்த வங்கியிலிருந்து எடுத்தார் என்றால் - எனக்கு தெரியாது. எனது வங்கி கணக்கிலிருந்து எடுக்கவில்லை என்றால் - சரிதான். எந்த தேதியில் நகையை அடமானம் வைத்து பணம் வாங்கினார் என்றால் - 10 பவுன் நகையை அடமானம் வைத்து கடன் வாங்கினார். யாரிடம் வாங்கினார்ள ன்றால் - ஒரு சேட்டிடம் அடமானம் வைத்தார். அவர் மன்னார்குடியை சேர்ந்தவர். சித்ராவிடம் எந்த தேதியில் எங்களிடம் வாங்கிய பணத்தை சீனிவாசன் கொடுத்தார் என்றால் - அன்றைய தேதியில் பெற்றுக்கொண்டதாக சித்ரா அத்தை சொன்னார். சித்ரா பணம்

வாங்கிக்கொண்டதாக சொல்லி ஏதேனும் ரசீது சீனிவாசன் பெயருக்கோ, அல்லது என் அப்பா பெயருக்கோ கொடுத்தாரா என்றால் - இல்லை. நாங்கள் ரசீது கேட்டோமா என்றால் - உறவினர் என்பதால் கேட்கவில்லை. சீனிவாசன் சித்ராவிடம் பணம் கொடுத்து இரசீது பெற்றுக்கொண்டாரா என்றால் - அதுபற்றி தெரியாது. பொது அதிகார பத்திரம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்பதால் சீனிவாசன் சித்ராவிடம் எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்றால் - சரியல்ல.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.